# தேர்வுத்தாள் 1

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q1. ____________________ முன்னிட்டுச் சிராங்கூன் சாலையில் ஒளியூட்டு நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

(1) தீபாவளியை (3) தீபாவளியின்

(2) தீபாவளிக்கு (4) தீபாவளியிடம் (    )

Q2. வாழ்க்கையில் வெற்றிப் பெற கடின ____________________ மிக அவசியம்.

(1) உழைப்பின் (3) உழைப்பால்

(2) உழைப்புக்கு (4) உழைப்பு (    )

Q3. “வெகு நேரமாக ஏதோ ____________________ ஆழ்ந்திருப்பது போல் தெரிகிறது", என்று நண்பனிடம் கண்ணன் சொன்னான்.

(1) சிந்தனையில் (3) சிந்தனையால்

(2) சிந்தனையை (4) சிந்தனையோடு (    )

Q4. தன் பணப்பையை எடுத்துக்கொண்டு அம்மா ____________________ புறப்பட்டார்.

(1) வீட்டில் (3) வீட்டினது

(2) வீட்டிலிருந்து (4) வீட்டோடு (    )

Q5. கந்தன் வீட்டுக்குச் செல்லும் விருந்தினர்களுக்கு அவன் அம்மா ____________________ பழரசமும் பரிமாறுவார்.

(1) உணவில் (3) உணவோடு

(2) உணவின் (4) உணவை (    )

## A2 செய்யுள்/பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q6. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட ____________________.

(1) அன்னை (3) மாதா
(2) தாய் (4) அம்மா ( )

Q7. தன் ____________________ தனக்குத் தெரியாது.

(1) வால் (3) முதுகு
(2) கால் (4) புறம் ( )

Q8. தான் பிடித்த ____________________ மூன்றே கால்.

(1) கழுகுக்கு (3) காக்காக்கு
(2) மயிலுக்கு (4) முயலுக்கு ( )

Q9. அளவுக்கு ____________________ அமுதமும் நஞ்சு.

(1) கெஞ்சினால் (3) மிஞ்சினால்
(2) மீறினால் (4) கொஞ்சினால் ( )

Q10. ____________________ ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(1) வாகாவா (3) சாகாவா
(2) யாகாவா (4) யாவாகா ( )

## A3 அடைமொழி / எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q11. நமது நாட்டை ஜப்பானியர்கள் ஆண்டபோது அவர்களை ________________ பலர் போராடினார்கள்.

(1) எதிர்த்து (3) வீரமாக

(2) ஒழித்து (4) உறுதியாக ( )

Q12. அத்தை தான் ________________ மாங்காய்களைக் கொண்டு ஊறுகாய் செய்தார்.

(1) வாங்கும் (3) வாங்கிய

(2) வாங்க (4) வாங்குகிற ( )

Q13. சிங்கப்பூரின் ________________ பாதுகாப்புக்கு நமது ராணுவமே காரணம்.

(1) பெருமையாக (3) வலிமையாக

(2) வலிமையான (4) பெருமையான ( )

Q14. கவிஞர் வாலி தமது பாடல்களில் இயற்கையையும் ________________ பாடியுள்ளார்.

(1) இணைத்து (3) இணையும்

(2) இணைந்து (4) இணைக்கிற ( )

Q15. வேடனின் தூக்கத்தைப் புலி ________________ விட்டது.

(1) கலைக்க (3) கலைய

(2) கலைக்கிற (4) கலைத்து ( )

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

நான் எவ்வளவு தூரம் ஓடினேன் என்பது எனக்கே தெரியாது. எனக்கு மேல்மூச்சு Q(16) __________ வாங்கியது. அந்த உருவம் என்னை பின் தொடருகிறதா என்று மீண்டும் ஒருமுறை திரும்பி பார்த்தேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை Q(17) __________ காணவில்லை. "அப்பாடா" என்று நிம்மதியாக ஒரு பெருமூச்சுவிட்டேன். தாகத்தால் நாக்கு Q(18) __________ அந்தப் பயங்கரமான உருவத்தின் கண்களில் அகப்படாமல் எங்கேயாவது சென்று ஒளிந்து கொள்ளவேண்டும் என்று எண்ணினேன். சுற்றும் முற்றும் பார்த்தேன்.

தூரத்தில் ஒரு வீடு இருப்பதுபோல Q(19) __________ வேகமாக அந்த வீட்டை நோக்கி ஓடினேன். அந்தப் பெரிய வீட்டின்முன் நான் Q(20) __________ நின்றேன். 'மனித நடமாட்டம் இல்லாத இந்த அடர்ந்த காட்டிற்குள் இவ்வளவு பெரிய வீடா? இந்த வீட்டிற்குள் வசிப்பவர் யார்?" என்ற சந்தேகத்துடன் கதவைத் தட்டினேன்.

Q16. (1) கீழ்மூச்சு (2) பெருமூச்சு
(3) முழுமூச்சு (4) பன்மூச்சு ( )

Q17. (1) யாரையும் (2) எல்லோரையும்
(3) மனிதர்களையும் (4) பொருட்களையும் ( )

Q18. (1) கசிந்தது (2) ஊற்றியது
(3) வறண்டது (4) காய்ந்தது ( )

Q19. (1) மறைந்தது (2) உதித்தது
(3) கண்டது (4) தோன்றியது ( )

Q20. (1) தயங்கி (2) மயங்கி
(3) குனிந்து (4) வீரத்தோடு ( )

WORDSMITH BEYOND LEARNING

## B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஒருநாள், ஓரிடத்தில், அறிவற்ற வாலிபர்கள் மூவர் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, அவ்வழியே சவ ஊர்வலம் ஒன்று சென்றது. அதைக் கண்ட அவர்களின் எண்ணம் மரணத்தைப் பற்றிச் சிந்தித்தது. மரணம் எப்பொழுது யாருக்கு வரும் என்பதைப் பற்றி யாரும் அறிந்ததில்லை. நாம் ஏன் அந்த மரணத்தைக் கண்டு பேசி வரக்கூடாது என்று எண்ணி, மரணத்தைக் கண்டுவர முடிவு செய்து மூவரும் புறப்பட்டனர்.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும் எதிரே முதியவர் ஒருவர் வருவதைக் கண்டனர். அவர்கள் அவரை **அணுகி**, "மரணத்தை எங்கே சந்திக்கலாம்? அது செய்யும் **கொடுமைக**ளைப் பற்றி உணர விரும்புகிறோம். மரணம் எங்கே இருக்கும் என்று கூற முடியுமா? என்றனர். இவ்விளைஞர்கள் மூடர்கள் என்பதை அறிந்து கொண்ட அந்த முதியவர், "இளைஞர்களே, நீங்கள் செய்யப்போகும் செயல் பாராட்டுதலுக்குரியது. இங்கிருந்து நேர் வழியே சென்றால் மாந்தோப்பைச் சென்றடைவீர்கள். அத்தோப்பிற்கு மரணம் அடிக்கடி வந்துபோகும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அங்கு சென்று பாருங்கள்" என்று கூறினார்.

அம்மூவரும் சிறிது நேரத்தில் மாந்தோப்பை அடைந்தனர். ஒரு மாமரத்தின் அடியில் ஒரு மேட்டைக் கண்டனர். அங்கே கிடந்த மண்வெட்டி, கடப்பாறை ஆகியவற்றைக் கொண்டு மேட்டைத் **தகர்த்தனர்**. அங்கே புதையல் ஒன்றைக் கண்டனர். இனிமேல் தங்கள் ஆயுட்காலம் முழுவதும் அதைக் கொண்டு இன்பமாக வாழலாம் எனப் பேசிக் கொண்டனர். மரணத்தைத் தேடவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனத்தைவிட்டு ஓடிவிட்டது.

இப்புதையலை எப்படி தங்கள் வீட்டிற்குக் கொண்டுபோவது என்று **ஆலோசித்தனர்**. சிறிது நேரத்தில் அவர்களுக்குப் பசித்ததால், அவர்களில் ஒருவன் **பானமும்** உணவும் வாங்கி வரச் சென்றான். ஒவ்வொருவரும் அப்புதையல் முழுவதையும் தாம் ஒருவரே அடைய வேண்டும் என்று எண்ணியதால் அதற்கான **உபாயத்தை** யோசித்தனர்.

உணவும் பானமும் வாங்கியவன் அவற்றில் நஞ்சைக் கலந்து வந்து கொடுத்தான். அவற்றைப் பெற்றுக் கொண்டதும் அந்த இருவரும் அவனைக் கொன்றுவிட்டு அவன் கொண்டு வந்த உணவை உண்டு இறந்தனர். முதியவரின் **வாக்குப்படி** அம்மூவரும் மாந்தோப்பில் மரணத்தைக் கண்டனர்.

## தேர்வுத்தாள் 1

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q21. இளைஞர்கள் ஏன் மரணத்தைப் பற்றி பேசினர்?

(1) மூவரும் சந்தித்துக் கொண்டதால்
(2) பிணம் ஒன்றைக் கண்டதால்
(3) பிணம் ஒன்று தூக்கிச் செல்லப்படுவதைக் கண்டதால்
(4) யார் மரணம் அடைவார்கள் என அறிய ( )

Q22. மூவரும் முதியவரிடம் என்ன கேட்டனர்?

(1) மாந்தோப்பு எங்கிருக்கிறது என்று கேட்டனர்
(2) மரணத்தின் வழி எங்கிருக்கிறது என்று கேட்டனர்
(3) மரணம் எதனால் வரும் என்று கேட்டனர்
(4) மரணம் எப்படி இருக்கும் என்று கேட்டனர் ( )

Q23. அவர்கள் எப்போது மரணத்தை மறந்தார்கள்?

(1) சிறிய மேட்டைப் பார்த்தபோது
(2) மரணத்தைப் பார்க்க முடியாததால்
(3) மேட்டைத் தகர்த்ததால்
(4) புதையலைப் பார்த்த பின்பு ( )

Q24. அவர்கள் எவ்வாறு மரணத்தைக் கண்டனர்?

(1) உணவு வாங்கியவனைக் கொன்றதால்
(2) இருவர் நஞ்சுண்டு இறந்ததால்
(3) மூவரும் இறந்ததால்
(4) ஒருவருக்கொருவர் துரோகம் செய்ததால் ( )

## சொற்பொருள்

**வினா Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (2 மதிப்பெண்கள்)**

Q25. உபாயத்தை

(1) வழியை (3) உத்தியை
(2) பழியை (4) துன்பத்தை ( )

WORDSMITH BEYOND LEARNING

## 'ஆ' பிரிவு

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q26. வெயில் அதிகமாக இருந்ததால், எனக்குத் தாகமாக இருந்தது. குளிர்பானம் **அருந்தியதும்** என் தாகம் ____________.

Q26. (        )

Q27. ஆசிரியர் மண்டபத்தில் மாணவர்களுக்கு ____________ ஆற்றினார். மாணவர்கள் அதைக் கவனித்துக் கேட்டனர்.

Q27. (        )

Q28. திரு. குமார் ஒரு விலையுயர்ந்த பேனா வாங்கினார். அவர் கடைக்காரரிடம் தன் பெயரை அதில் ____________ தரச் சொன்னார்.

Q28. (        )

Q29. பேரங்காடியில் பொருட்களை வாங்கிய என் அம்மா ____________ பையைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

Q29. (        )

| | |
|---|---|
| (1) கனமான | (5) தணிந்தது |
| (2) பொறித்து | (6) கணமான |
| (3) தனிந்தது | (7) உரை |
| (4) உறை | (8) பொரித்து |

## தேர்வுத்தாள் 1

## D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி. (10 மதிப்பெண்கள்)**

**பிஷான் குழுத்தொகுதியும்**
**இந்திய கலாச்சார மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்யும்**

**பொங்கல் கலைநிகழ்ச்சி 2016**

நாள் : 15.01.2016

இடம் : பிஷான் சமூகமன்றம்

நேரம் : காலை 9 முதல் மாலை 5 வரை

பதிவுக் கட்டணம் : $10.00 (மதிய உணவு இலவசமாக வழங்கப்படும்)

- ❖ ஜனவரி 9-ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்பவர்களுக்குப் பொங்கல் சமைப்பதற்கான அனைத்துப் பொருட்களும் இலவசமாகக் கொடுக்கப்படும். நால்வர் கொண்ட குழுவாகப் பதிவு செய்துகொண்டால் 20% கழிவு உண்டு. இந்தச் சிறப்பு சலுகைகளைப் பெற உடனே பதிவு செய்துகொள்ளுங்கள்!
- ❖ இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினரான பிஷான் குழு தொகுதித் தலைவருடன் இந்திய கலாச்சார மன்றத்தைச் சேர்ந்த திரு மதனும் வருகை தருகிறார்.
- ❖ உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க கீதா நடனக் குழுவினரின் சிறப்பு நடனமும் இடம்பெறும்.



நுழைவுச் சீட்டுகளைப்
பெற்றுக்கொள்ளும் இடம்:
→பிஷான் சமூக மன்ற
அலுவலகம்
→சாந்தி புஷ்பக்கடை

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் யார்?

(1) பிஷான் சமூகமன்றத் தலைவர்

(2) இந்திய கலாச்சார மன்றத்தைச் சேர்ந்த திரு. மதன்

(3) பிஷான் குழு தொகுதித் தலைவர்

(4) கீதா நடனக் குழுவினர் ( )

Q31. எந்த அமைப்புகள் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன?

(1) மீனா புஷ்பக்கடையும் இந்திய கலாச்சார மன்றமும்

(2) பிஷான் சமூகமன்றமும் பிஷான் குழுத் தொகுதியும்

(3) இந்திய கலாச்சார மன்றமும் பிஷான் சமூக மன்றமும்

(4) பிஷான் குழுத் தொகுதியும் இந்திய கலாச்சார மன்றமும் ( )

Q32. யாருக்கு இலவச சமையல் பொருட்கள் வழங்கப்படும்?

(1) 10 வெள்ளி கட்டணம் செலுத்தி பதிவு செய்பவர்களுக்கு

(2) ஜனவரி 9-ஆம் தேதிக்குள் பதிவு செய்பவர்களுக்கு

(3) நால்வர் கொண்ட குழுவாகப் பதிவு செய்பவர்களுக்கு

(4) பிஷான் சமூகமன்றத்தில் பதிவு செய்பவர்களுக்கு ( )

Q33. பொங்கல் கலைநிகழ்ச்சியின் சிறப்புச் சலுகைகளால் ஒருவர் அடையும் நன்மைகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஓர் ஏழைக் குடியானவன் தன் வயலில் ஒரு பாம்புப் புற்றைக் கண்டான். அதில் ஒரு பாம்பு இருப்பதைக் கண்டு அவன் அதற்குத் தினமும் பால் வார்த்து விட்டுப் போவான். அந்தப் பாம்பும் அந்தப் பாலைக் குடித்துவிடும். குடியானவன் அதை நாக தேவதை என்றே நினைத்து வந்தான். அவனுக்கு தினமும் அந்தப் பாம்பு ஒரு பொற்காசைக் கொடுத்து வந்தது.

இப்படியே பல நாட்கள் சென்றன. ஒருமுறை அந்தக் குடியானவன் வேறு ஊருக்குச் செல்லவேண்டிய நிமித்தம் ஏற்பட்டது. அவன் திரும்பி வருவதற்கு கொஞ்ச நாட்களாகும் என்பதால் அவன் பாம்பிற்கு தினமும் பால் விடவேண்டும் என்று தன் மகனிடம் கூறினான்.

மகனோ மறுநாள் பாம்பைக் கொன்றுவிட்டுப் புற்றில் நிறைந்து கிடந்த தங்க நாணயங்களை முழுமையாக எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டான். அதனால் அவன் பாம்பைக் கொல்ல முயற்சி செய்தான். பாம்போ அவனை விடாமல் துரத்தி கடித்தது. பாம்பின் நஞ்சு தலைக்கேறியதால் அவன் இறந்தான்.

குடியானவன் திரும்பிவந்து நடந்ததை அறிந்து பாலை எடுத்துக் கொண்டு பாம்புப் புற்றின் அருகே சென்றான். நாக தேவதையை எண்ணிக் கூப்பிட்டான். அவன் அங்குச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் பாம்பு அவன் முன் தோன்றி, "நீயும் உன் மகனைப் போல் பேராசை கொண்டவன். உன் மகன் இறந்து போனதைக் கூட மறந்து பாலை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாயே!" எனக்குப் பால் வார்த்துவிட்டு மறுபடியும் பொற்காசைப் பெற நினைக்கிறாயே! போ! போ! இனிமேல் உனக்கு ஒன்றும் இல்லை. இனி என் முன் நிற்காதே!" என்று கூறிவிட்டு அடுத்த நொடியே புற்றுக்குள் புகுந்தது.

WORDSMITH achieve Big Jump SKILLS grades

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. ஏழைக் குடியானவன் பாம்பை எங்கே கண்டான்? (2 மதிப்பெண்கள்)

Q35. தினந்தோறும் பாம்பு அவனுக்கு என்ன கொடுத்தது? (2 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

Q36. வேறு ஊருக்குச் செல்லவிருந்ததால் குடியானவன் மகனிடம் என்ன கூறிச் சென்றான்? (3 மதிப்பெண்கள்)

Q37. மகன் தந்தை இல்லாத நேரம் என்ன செய்ய எண்ணினான்? (4 மதிப்பெண்கள்)

Q38. மகன் இறந்ததை மறந்த தந்தையிடம் பாம்பு என்ன கூறியது? (4 மதிப்பெண்கள்)

Q39. "நீயும் உன் மகனைப் போல் பேராசை கொண்டவன்" என்னும் வாக்கியத்தில் "பேராசை" என்னும் சொல் எதைக் குறிக்கிறது? (3 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING

Q40. பேராசையால் குடியானவனின் மகனுக்கு ஏற்பட்ட நிலையை விளக்கி நீ உன் நண்பருக்குக் குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள நண்பனுக்கு

இப்படிக்கு

உன் தோழன்

# அருஞ்சொற்பொருள்

## தேர்வுத்தாள் 1

| | | |
|---|---|---|
| 1. ஒளியூட்டு நிகழ்ச்சி | - | விளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்குவது (Lighting up ceremony) |
| 2. பழரசம் | - | பழச்சாறு (Fruit juice) |
| 3. புறம் | - | பின்பக்கம் (Back) |
| 4. அமுதமும் | - | சுவைமிக்க உணவும் (Ambrosia / Tasty Food) |
| 5. ஆண்ட | - | ஆட்சிசெய்த (Rule the country) |
| 6. ஒழித்து | - | அழித்து (Abolish) |
| 7. கண்ணுக்கெட்டிய | - | பார்வைக்குத் தெரியும் வரை (As far as the eye can see) |
| 8. அகப்படாமல் | - | மாட்டிக் கொள்ளாமல் (Without getting caught) |
| 9. அடர்ந்த | - | மரங்கள் நெருங்கிய (Dense) |
| 10. அணுகி | - | அருகில் சென்று, நெருங்கி (Approach) |
| 11. கொடுமைகளை | - | தீமைகளை (Evils) |
| 12. தகர்த்தனர் | - | உடைத்து அழித்தனர் (To demolish) |
| 13. ஆலோசித்தனர் | - | கலந்து பேசுதல் (Consultation) |
| 14. பானமும் | - | நீராகாரமும் (Water / Drink) |
| 15. வாக்குப்படி | - | சொற்படி (As told) |
| 16. அருந்தியதும் | - | குடித்ததும் (Drank) |
| 17. ஆற்றினார் | - | பேசினார் (Spoken) |
| 18. இணைந்து | - | சேர்ந்து (Together) |
| 19. குடியானவன் | - | உழவன் (Farmer) |
| 20. புற்றை | - | பாம்புகள் தங்கியிருக்கும் இடத்தை (Snake pit) |
| 21. பொற்காசை | - | தங்க நாணயத்தை (Gold coin) |
| 22. நிமித்தம் | - | சூழ்நிலை (Situation) |
| 23. நஞ்சு | - | விஷம் (Poison) |

# விடைத்தாள்

## தேர்வுத்தாள் 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1 | 13. | 2 | 25. | 3 |
| 2. | 4 | 14. | 1 | 26. | 5 |
| 3. | 1 | 15. | 4 | 27. | 7 |
| 4. | 2 | 16. | 1 | 28. | 2 |
| 5. | 3 | 17. | 1 | 29. | 1 |
| 6. | 2 | 18. | 3 | 30. | 3 |
| 7. | 3 | 19. | 4 | 31. | 4 |
| 8. | 4 | 20. | 1 | 32. | 2 |
| 9. | 2 | 21. | 3 | | |
| 10. | 2 | 22. | 2 | | |
| 11. | 1 | 23. | 4 | | |
| 12. | 3 | 24. | 3 | | |

33. அவர் பொங்கல் சமைப்பதற்கான அனைத்துப் பொருள்களையும் இலவசமாகப் பெறுவார்; மேலும் அவர் 20% கழவு பெறுவார். இவையே சிறப்புச் சலுகைகளால் ஒருவர் அடையும் நன்மைகள் ஆகும்.

34. ஏழைக் குடியானவன் பாம்பைப் பாம்பு புற்றினுள் கண்டான்.

35. தினந்தோறும் பாம்பு ஏழைக் குடியானவனுக்கு ஒரு பொற்காசைத் தந்தது.

36. வேறு ஊருக்குச் செல்லவிருந்ததால் குடியானவன் தன் மகனிடம் பாம்பிற்குத் தினமும் பால் ஊற்ற வேண்டும் என்று கூறிச் சென்றான்.

37. மகன் தந்தை இல்லாத நேரம் பாம்பைக் கொன்றுவிட்டு புற்றில் நிறைந்து கிடந்த தங்க நாணயங்களை ஒரேயடியாக எடுத்துக்கொள்ள எண்ணினான்.

38. மகன் இறந்ததை மறந்த தந்தையிடம் பாம்பு அவனும் அவனது மகனைப் போல் பேராசைக்காரன் என்று கூறி இனிமேல் பொற்காசு கொடுக்க முடியாது என்று கூறியது.

39. ஏழைக் குடியானவன் தன் மகன் இறந்ததையும் மறந்து, பாம்பிற்கு மறுபடியும் பாலை வார்த்துப் பொற்காசுகளைப் பெற எண்ணியது ‘பேராசை'யைக் குறிக்கிறது.

40. குடியானவனின் மகன் பாம்பைக் கொன்றுவிட்டுப் புற்றில் நிறைந்து கிடக்கும் தங்கநாணயங்களை ஒரேடியடியாக எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டான். அதனால் அவன் பாம்பைக் கொல்ல முயற்சி செய்தான். பாம்போ அவனை விடாமல் துரத்திக் கடித்தது. அவன் நஞ்சு தலைக்கேறி இறந்தான்.